பக்கங்கள் 16+7

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 15 செவ்வாய்க்கிழமை 01.10.2024 | அதிர்வு 61

## புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணி இரு வாரங்கள் இடைநிறுத்தம்

### ஜனாதிபதி அறிவுறுத்தல்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# அநுர – சிறீதரன் நேரில் சந்திப்பு

### சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் பேச்சு

இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையில் இன்று செவ்வாய்க்கிழமை விசேட சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது புதிய ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு வாழ்த்துத் தெரிவித்த முன்னாள் எம்.பி. சிறீதரன், சமகால அரசியல் விடயங்கள் மற்றும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினார். 04

# அநுரவை மீண்டும் சந்தித்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜே சங்குக்கும் இடையிலான சந்திப்பு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, இலங்கையின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற அநுரகுமார திஸாநாயக்கவுக்குத் தனது வாழ்த்துகளைத் தெரிவித்த அமெரிக்கத் தூதுவர், அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான இருதரப்பு உறவுகளை தொடர்ந்தும் மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடினார். 04



# சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்!



(எஸ்.நிதர்ஷன்)

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் ஐ.ஓ.எம். அலுவலகத்துக்கு முன்பாக இன்று காலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சிறுவர்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக நீதி கோரி கோஷங்களை எழுப்பினர்.
















# முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பில் புல்மோட்டையில் ஒருவரை நிறுத்துக

## ரவூப் ஹக்கீமிடம் கோரிக்கை

(அபு அலா)

திருகோணமலை மாவட்டத் தொகுதியில் இதுவரை காலமும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியால் இரு வேட்பாளர்கள் மாத்திரமே நிறுத்தப்பட்டு வருகின்றனர். இம்முறை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் புல்மோட்டை பிரதேசத்திலிருந்து மிகப் பொருத்தமான ஒருவரை களமிறக்க வேண்டும் என்று அக்கட்சியின் புல்மோட்டை மத்திய குழுவினர் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமை கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் புல்மோட்டை மத்திய குழுக் கூட்டம் குச்சவெளி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.முபாறக் தலைமையில் இடம்பெற்றது. இதில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் திருகோணமலை மாவட்ட தொகுதி சார்பாக, கிண்ணியாவிலிருந்த ஒரு வேட்பாளரும் மூதூரிலிருந்து ஒரு வேட்பாளரும் நிறுத்திய கட்சி, இம்முறை அவ்வாறில்லாமல் மூன்று வேட்பாளர்களை உள்ளடக்க வேண்டும். அதில் புல்மோட்டை பிரதேசத்திலுள்ள ஒருவர் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது.

சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை வைத்திருக்கும் குச்சவெளி பிரதேச சபைக்கு உட்பட்ட எமது பிரதேசத்தில் மிகப் பொருத்தமான கட்சியின் கொள்கைக்கும், அதன் தலைமைக்கும் கட்டுப்பட்டு மக்களின் தேவைகளைத் தாமதியாது நிறைவேற்றி நடக்கக்கூடிய ஒருவரை எதிர்வரும் பொதுத்தேர்தலில் நிறுத்தவேண்டும்.

இந்தத் தீர்மானத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும், அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமிடமும் முன்வைக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் இத்தேர்தல் களத்தில் புல்மோட்டை சார்பில் ஒருவரை நிறுத்துவதற்கான சந்தர்ப்பத்தை எங்களுக்குத் தாருங்கள் என்ற விடயம் தொடர்பிலும் எமது பிரதேசத்துக்கு உரிய அரசியல் உரிமை மற்றும் எதிர்கால அரசியல் சம்பந்தமான உறுமொழியை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தின் பிரகாரம் நாம் செயல்படுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# அம்பாறை தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த கட்சிகள் இணையுங்கள்

## கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இனிய பாரதி

(பாறுக் ஷிஹான்)

தமிழ் பிரதிநிதித்துவத்தை அம்பாறை மாவட்டத்தில் உறுதிப்படுத்த அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அதற்காக எந்த நேரத்திலும் ஒத்துழைக்க தயாராகவுள்ளார் என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இனிய பாரதி என்றழைக்கப்படும் குமாரசாமி புஸ்பகுமார் தெரிவித்தார்.

அம்பாறை ஊடக அமையத்தில் சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் நேற்று திங்கட்கிழமை (30) இரவு இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது,

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ள அனைவரும் ஒன்றிணைய வேண்டும். ஏனெனில் கடந்த கால தேர்தலில் அம்பாறை மாவட்டத்துக்குக் கிடைக்க வேண்டிய தமிழ் பிரதிநிதித்துவத்தை




இல்லாமல் செய்வதற்கு பல்வேறு தரப்பினரும் அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தந்து எமது மக்களின் வாக்குகளை சிதறடித்தனர். இம்முறையும் அவ்வாறு எமது பிரதிநிதித்துவத்தை இழந்து விடாமல் இருப்பதற்கு சகல கட்சிகளும் ஒன்றிணைய சகலரும் ஒத்துழைப்பு செய்ய முன்வர வேண்டும்.

ஆனால் இன்றுவரை எவரும் ஒன்றிணைவதற்கு முன்வராத சந்தர்ப்பத்தில் மக்களின் ஆதரவுடன் சுயேட்சையாக களமிறங்கி தமிழ் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொடுப்பதற்கும் தயங்க மாட்டேன். இன்றைய சூழலில் பூனைக்கு மணி கட்டுவது யார்? என்ற நிலைமையே அம்பாறை மாவட்ட தேர்தல் கள நிலவரங்களில் தெரிகின்றது.

இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை பொது மக்கள் ஒரு தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. விகிதாசார தேர்தல் காரணமாக அனைத்து கட்சிகளும் தங்களது நலனை நோக்காகவும் தேசியப் பட்டியலை இலக்காகவும் நோக்கி பயணிக்கின்றார்களே அன்றி மக்களின் நலனில் அக்கறையின்றிக் காணப்படுகின்றனர்.

இது தவிர பொதுக் கட்டமைப்பு ஒன்றின் ஊடாக நாங்கள் போட்டியிடுவதன் மூலம் மக்களின் விருப்பத்தை பெற முடியும்.அத்துடன் 35 ஆயிரம் வாக்குகளை இத்தேர்தலில் பெறுவது தான் எமது இலக்காக உள்ளது.

கடந்த காலங்களில் தேர்தலில் போட்டியிட்ட கருணா அம்மான் தந்த பாடம் தான் இவ்வாறான நிலைமையை நாம் எதிர் நோக்க காரணமாகின்றது. எனவே அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ள எதிர்வரும் தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகள் தரப்பினர் சிந்திக்க வேண்டும்.- என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**அநுரவை மீண்டும்...**

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள், பொருளாதார மற்றும் சமூக ஒத்துழைப்பை வலுப்படுத்தல், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர ஆர்வமுள்ள துறைகள் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவான கையோடு அவரை அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜே சங் நேரில் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.







**அநுர - சிறீதரன்...**

இந்தச் சந்திப்பு தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

"இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரனைச் சந்தித்தேன்.

இதன்போது புதிய ஆட்சிக்கு வாழ்த்துத் தெரிவித்த சிறீதரன், சிநேகபூர்வமாகக் கலந்துரையாடினார்." - என்றுள்ளது.

**புலமைப்பரிசில்...**

வினாத்தாள் முரண்பாட்டுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்த பெற்றோர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளை இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்துமாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் 3 கேள்விகள் அன்றி 8 கேள்விகள் பரீட்சைக்கு முன்பாகவே வெளியாகி இருந்தன என்றும், அந்தப் பரீட்சையை மீண்டும் நடத்த வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள், ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.



# பிரிட்டனில் இடம்பெற்ற தமிழர் விளையாட்டு விழா



பிரித்தானியாவில் நோர்தம்ரன் பகுதியில் நோர்தம்ரன் தமிழ் விளையாட்டு கழகம் மற்றும் நோர்தம்ரன் தமிழ் கல்விக்கூடம் இணைந்து ஏற்பாடு செய்த விளையாட்டு விழா கடந்த 29 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நோர்தம்டன் மேஜர் கலந்து கொண்டார். அத்துடன் ஐக்கிய இராச்சிய தேசிய கொடியையும் ஏற்றி வைத்தார்.

நிகழ்வில் சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், கரப்பந்தாட்டம் மற்றும் பெரியவர்களுக்கான கிராமிய விளையாட்டுகளும் நடை பெற்றதோடு சுவையான தாயக உணவுகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் விளையாட்டில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் பணப் பரிசுகன் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சிறுவர்கள், பெரியவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வுக்கான நிதி பங்களிப்பை நோர்தம்டன் தமிழ் வர்த்தகர்கள் வழங்கினர். குறித்த விளையாட்டு போட்டி முதல் தடவையாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது





# கல்முனையில் புத்தகக் கண்காட்சி

(கஜனா)

வாசிப்பை வளர்ப்போம் நேசிப்போம் எனும் தொனிப் பொருளில் கல்முனை யில் புத்தகக் கண்காட்சி ஒன்று எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

கல்முனை கலை இலக்கிய நண்பர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கண்காட்சி கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை அருகில் கிறிஷ்தா இல்ல மண்டபத்தில் காலை 10 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இடம்பெறவுள்ளது.

இதன்போது தமிழின் முக்கியமான நூல்கள் ஈழம், இந்திய, புகலிட எழுத் துக்கள், பதிப்புகள் என்பன காட்சிப்படுத தப்பவுள்ளன.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இன்று சிறுவர் தினம்

ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி - இன்றைய தினம் - சர்வதேச சிறுவர் தினமாக இலங்கையில் கொண்டாடப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14ஆம் நாள் இந்தியாவில் குழந்தைகள் நாளாக கொண்டாடப்படுகிறது. சர்வதேச குழந்தைகள் நாளை டிசம்பர் 14, 1954 இலிருந்து, ஐக்கிய நாடுகள் மற்றும் யுனிசெவ் அமைப்புகள் ஆண்டு தோறும் நவம்பர் 20 அன்று கொண்டாடுகின்றன.

உலகெங்கணும் உள்ள குழந்தைகளுக்கிடையே புரிந்துணர்வையும் பொது நிலைப்பாட்டையும் ஏற்படுத்துவதற்காக இந்நாள் ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப் படுத்தப்பட்டது.

2024 ஆம் ஆண்டு உலகளாவிய சிறுவர்கள் தினத்தின் கருப்பொருள் "ஒவ்வொரு குழந்தையையும் சமமாகப் பாதுகாத்து நடத்துங்கள்" என்பதாகும்.

ஒவ்வொரு குழந்தையும், இனம், மதம், அல்லது தோல் நிறம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், சமமான அக்கறையுடனும் பாதுகாப்புடனும் நடத்தப்பட வேண்டும் என்பதை இந்தத் கருப்பொருள் வலியுறுத்துகிறது.

உலகளாவிய ரீதியில் சிறுவர்களை மகிழ்விக்கும் நோக்கிலும் அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் நோக்குடனும் அவர்களுக்கென்று ஒரு தினமும் வகுக்கப்பட்டு இந்த சிறுவர் தினம் கொண்டாடப்படுவது சாலச் சிறந்ததே.

18வயதிற்குக் குறைந்த சகலரும் சிறுவர்கள் என ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி சர்வதேச ரீதியில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட சிறுவர் உரிமை பிரகடனத்தில் 1991ஆம் ஆண்டு இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது.

உலகில் வாழ்கின்ற மக்களில் மூன்றிலொரு பகுதியினர் சிறுவர்கள்.

சிறுவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்களது கருத்துக்கள் செவிசாய்க்கப்பட வேண்டும் என்ற நோக்கிலேயே சிறுவர் தினம் சர்வதேச ரீதியாக கொண்டாடப்பட்டு வருகிறது.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், சிறுவர்களைப் போர் நடவடிக்கையில் ஈடுபடுத்துதல், சிறுவர் துஷ்பிரயோகம் போன்றவற்றுக்கு எதிராக சமூக ரீதியாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் சிறுவர் தின நிகழ்வுகள் முக்கிய பங்களிக்க முடியும்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.


இணையம் ஊடாக சிறுவர் துஷ்பிரயோகங்கள் வேகமாக அதிகரித்து வருவதாக அதன் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார, சமூக நிலைமைகளை கருத்திற்கொண்டு சிறுவர்கள் விடயத்தில் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென அவர் வலியுறுத்துகின்றார்.

இதனிடையே சர்வதேச ரீதியில் இன்று முதியோர் தினமும் கொண்டாடப்படுகின்றது.

உலகளவில் 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் சுமார் எண்பது கோடிப் பேர் இருக்கின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆரோக்கியமாக மற்றும் அன்பான வாழ்க்கை அனைத்து சிறுவர்களுக்கும் முதியோருக்கும் கிடைப்பதை சமூகம் உறுதிப்படுத்த வேண்டும். அதற்கு இன்றைய தினம் விழிப்புணர்வை ஏற்படுத்தட்டும்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# கீரிமலை - பருத்தித்துறை ஊடாக கொழும்புக்கு போக்குவரத்துச் சேவை

கீரிமலையில் இருந்து பருத்தித்துறை ஊடாகக் கொழும்புக்கான பஸ் சேவை இன்று செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகிறது.

தினமும் இரவு 7.15 மணிக்குக் கீரிமலையில் இருந்து சேவையை தொடங்கும் பேருந்து காங்கேசன்துறை - மயிலிட்டி - தொண்டைமானாறு - வல்வெட்டித்துறை ஊடாக பருத்தித்துறையை அடைந்து இரவு 9 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு மந்திகை - நெல்லியடி ஊடாக கொழும்புக்கு பயணமாகும்.

இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறை சாலையால் நடத்தப்படும் இந்தப் பஸ் சேவை 2020 ஆம் ஆண்டு கொரோனா மற்றும் ஆளணிப் பற்றாக்குறையால் நிறுத்தப்பட்டிருந்தது.

கீரிமலை கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ் தினமும் கொழும்பில் இருந்து இரவு 8. 30 மணிக்கு வெள்ளவத்தையில் தரித்து பயணிகளை ஏற்றிக்கொண்டு கொழும்பு கோட்டையை நோக்கிப் புறப்படும். கோட்டையில் இருந்து இரவு 9. 45 மணிக்கு புறப்பட்டு பருத்தித்துறையை வந்தடைந்து அங்கிருந்து கீரிமலை நோக்கிப் புறப்படும்.

# ஐயன்கன்குளம் பாடசாலையில் முதன்முதலில் 9 ஏ சாதனை!

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட மிகவும் பின்தங்கிய கிராம பாடசாலையான ஐயன்கன்குளம் மாகாவித்தியாலயத்தின் பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக மாணவி ஒருவர் 9 ஏ சித்தி பெற்றுப் பாடசாலைக்கும் கிராமத்துக்கும் பெருமையைத் தேடித்தந்துள்ளார்.

இன்பராசா நிலாயினி என்ற மாணவியே இந்தச் சிறப்புச் சித்தியைப் பெற்று அந்தக் கிராமத்தில் சாதனையை நிலை நாட்டியுள்ளார்

எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற இந்தக் கிராமத்தில் தந்தையை இழந்த நிலையில் தாயின் வழிகாட்டலின் கீழ் வளர்ந்து இந்தப் பெறுபேற்றைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# திருமலையில் வாசிப்பு மாத சிறுவர் தின நிகழ்வுகள்

(ஹஸ்பர் ஏ.எச்.)

இந்த வருடத்துக்கான தேசிய வாசிப்பு மாத நிகழ்வு " உலகை வென்ற வர்கள் வாசித்த மக்களே " என்ற தலைப்பில் இன்று (01) ஆரம்பமானது.

திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகத்தில் நகராட்சி மன்றத்தின் செயலாளர் தே. ஜெயவிஷ்ணு தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை (01) காலை ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக தேசிய வாசிப்பு மாத விளம்பரப் பதாதை நூலகத்தின் பிரதான வாயிலில் கட்டப்பட்டது.

சிறுவர் தினத்தை முன்னிட்டு நூலகத்தால் சிறுவர்களுக்கான சிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்றன. நிகழ்வுகளில் செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர், நூலகர், நூலக உதவியாளர்கள், ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.









# அக்கரைப்பற்று சமுர்த்தி வங்கிகளில் இடம்பெற்றுள்ள சிறுவர் தின நிகழ்வு

(நவாஸ்)

இன்று சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கான கெக்குலு சேமிப்பு கணக்குகள் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று மேற்கு மற்றும் கிழக்கு வங்கிகளில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.இந்த நிகழ்வில் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.அகமது ஷாபிர் கலந்து கொண்டார்.

மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர், கிழக்கு வங்கி முகாமையாளர் மற்றும் வங்கி உத்தியோகத்தர்களுடன் வங்கி யின் செயற்பாடுகளை வினைத்திறனா கச் செயற்படுத்துவற்கான ஆலோச னைகளையும் கலந்துரையாடி பகிர்ந்து கொண்டனர்.

அத்துடன் சிறுவர்களுக்கு பரிசில்க ளும் வழங்கி வைக்கப்பட்டன.



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# சேதமடைந்துள்ள வீதிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் மக்கள்

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா நகரில் உள்ள பல வீதிகளில் பாரிய குன்றும் குழியுமாக உள்ளதால் பாதசாரிகள் மற்றும் பாட சாலை மாணவர்கள் பெரிதும் பாதிக் கபட்டு வருவதாக தெரிவிக்கின்ற னர்.

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட் பட்ட மஸ்கெலியா நகரில் உள்ள பல வீதிகளில் பாரிய அளவில் குன்றும் குழியுமாக உள்ளதால் நகர் மக்கள் உட்பட பலர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

ஆலய வீதி, இஸ்லாமிய பள்ளி வீதி, பௌத்த விகாரை வீதி அதனை சுற்றியுள்ள குடியிருப்பு வீதிகள் பாரிய அளவில் குன்றும் குழியுமாக உள்ளன. பாதசாரிகள் மற்றும் பாடசாலை மாண வர்கள் குடியிருப்பாளர்கள் மழை நாள் களில் அவ்வீதியூடாகப் பயணிப்பதில் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அத்துடன் ஆலய வீதியில் உள்ள கழிவுநீர் செல்லும் வடிகாலில் கழிவுகள் மற்றும் கழிவு மண் தேங்கி நிற்பதால் துர் நாற்றம் வீசுகிறது. நுளம்பு தொல்லை அதிகரித்துள்ளது.

சம்பந்தப்பட்ட மஸ்கெலியா பிரதேச சபை முன் வந்து வீதிகளை செப்பனிடு வதுடன் கழிவு நீர் செல்லும் வடிகாலில் உள்ள அனைத்து குப்பைகள் மற்றும் மண்ணை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக் கின்றனர்.



# அக்கரைப்பற்றில் நடைபெற்ற பெரும்போக ஆரம்பக் கூட்டம்

(நவாஸ்)

1994 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நீர்ப்பாசன திருத்தச் சட்டத்தின் கீழ் கல்லோயா வலதுகரை அக்கரைப்பற்று திட்ட முகாமையாளர் அலுவலகத்துக்கு உட்பட்ட அக்கரைப் பற்று, ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை மற்றும் இறக்காமம் பிரதேசங்களுக்கான பெரும்போக ஆரம்பக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரம தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் விவசாயம் தொடர்பான பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. விவசாயிகளால் முன்மொழியப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகளும் முன் வைக்கப்பட்டன.

இக்கூட்டத்தில், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரும் அக்கரைப்பற்று பதில் பிரதேச செயலாளருமான பி.ரி.எம். இர்பான், அம்பாறை மாவட்ட விவசாய பணிப்பாளர் கே.எஸ். துசார பெரேரா, அம்பாறை மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர், அம்பாறை கமநல சேவை உதவி ஆணையாளர், அம்பாறை மாவட்ட விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர், அக்கரைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு, இறக்காமம் போன்ற பிரதேசங்களின் துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகள், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய போதனா சிரியர்கள், பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.





# சர்வதேச சிறுவர் தின நிகழ்வு

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று முனவ்வறா கனிஷ்ட கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச சிறுவர் தின நிகழ்வு அதிபர் எம்.ஐ.எம். உவைஸ் தலைமையில் இடம்பெற்றது.

# கல்முனை நூலகத்தில் சிறுவர் தின சிறப்பு நிகழ்வு





(அஸ்லம் எஸ்.மௌலானா)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்முனை பொது நூலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (01) சிறப்பு நிகழ்வு நடைபெற்றது.

நூலகர் ஏ.எல்.எம். முஸ்தாக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை மாநகர உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வர வர்மன் ஆகியோர் அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

இந்த நிகழ்வில் கல்முனை விவேகானந்த வித்தியாலயத்தை சேர்ந்த ஒரு தொகுதி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது இந்த மாணவர்கள் நூலகத்தின் அனைத்து பிரிவுகளையும் முழுமையாக பார்வையிட்டனர்.

சிறுவர் தினத்தின் முக்கியத்துவம், நூலகப் பயன்பாடு மற்றும் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்கள் அனைவருக்கும் இனிப்புப் பண்டங்களும் பரிசில்களும் வழங்கப் பட்டன.





# புத்தளம் நாடாளுமன்ற உறுப்புரிமையை வெல்வது தொடர்பாகக் கலந்துரையாடல்

(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

புத்தளம் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்புரிமையை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் தேசிய மக்கள் சக்தி ஊடாக வென்றெடுப்பது தொடர்பாக கலந்துரையாடல் நேற்றுத் திங்கட்கிழமை (30) இரவு புத்தளம் போல்ஸ் வீதி ஐஸ்டொக் நிறுவன கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது என்று ஏற்பாட்டு குழு சார்பாக சமூகவியலாளர் இப்லால் அமீன் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக இப்லால் அமீன் ஊடகங்களுக்கு தகவல் தெரிவிக்கையில்,

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட அரசியல் செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள், போராளிகள் மேற்கொண்ட தீர்மானங்களுக்கு அமைவாகப் புத்தளத்துக்கான ஆளுங்கட்சி எம்.பியை வெற்றி கொள்ளவும், தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட அரசியல் தலைமைகளுடன் மிக விரைவில் சந்தித்து தமது கோரிக்கைகளை முன்வைத்து அழுத்தம் கொடுக்கவும் ஏகமானதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.



பின்வரும் தீர்மானங்கள் இதில் நிறைவேற்றப்பட்டன என்று இப்லால் அமீன் மேலும் தெரிவித்தார்.

இன ரீதியாக, மத ரீதியாக இனி மேலும் பிரிந்து நின்று புத்தளம் தொகுதியை இதன் பின்னரும் அரசியல் அனாதை அந்தஸ்தத்தில் தொடர விடாது, புத்தளத்துக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை தேசிய மக்கள் சக்தி கட்சியில் வெற்றிக்கொள்ள சமூக, மார்க்க தலைமைகள் ஓரணியாக அணைத்திரள வேண்டும்.

இதை விடுத்து மக்கள் நிராகரித்த சிறுபான்மை முஸ்லிம் கட்சிகளை, மக்களுக்கு துரோகம் செய்த அரசியல் வாதிகளை மீண்டும் ஆட்சி பீடம் ஏற்றுவதற்கு துணைப்போக கூடாது.

தகுதி வாய்ந்த, தகைமையுடைய, சமூக அக்கறையும், நாட்டின் அபிவிருத்திக்கு பலம் சேர்க்கக் கூடிய மேலுமொரு வேட்பாளரை கட்சி ஊடாகக் களமிறக்கித் தொகுதியின் வெற்றிக்கும் நமக்கான நாடாளுமன்ற உறுப்புரிமையை வெல்வதற்கும் பூரண ஒத்துழைப்பை வழங்குதல்.

சிறுபான்மை கட்சிகளால் பிரித்தாளப்படும் சமூகத்தை விழிப்பூட்டித் தேசிய ரீதியான அரசியல் கலாச்சார மாற்றத்துக்கு சிதறடிக்கப்படும் வாக்குகளை ஒன்று சேர்த்து வெல்லப்போகும் ஆளும் அணிக்கு பலம் சேர்த்தல்.

எதுவித சுய லாபங்களையும் தனி மனித அரசியல் நிகழ்ச்சி நிரல்களையும் தாண்டி விட்டுக்கொடுப்புடன் பணியாற்றி அரசாங்கத்தின் ஆளும் அதிகாரம் ஊடாக தொகுதி மக்கள் ஏங்கி தவிக்கும் உரிமைகளை, அபிவிருத்திகளை, சமூக பாதுகாப்பை, அபிலாஷைகளை என்.பி.பி. கட்சியுடன் இணைந்து வெற்றிக்கொள்வதற்கு இணையுமாறும் இதன்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டது.



# சிறுவர் தின அணி வகுப்பு வீதி ஊர்வலம்

(திருகோணமலை)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட பூவரசன்தீவு அல் மினா மகா வித்தியாலயத்தில் இன்று சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது.

பள்ளி முதல்வர் எம்.ஓ.ஹதியத்துல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி அப்துல் மஜீத் அஜித் கலந்துகொண்டார்.

காலையில் மாணவர்களுக்கு உணவு வழங்கிய பின் சிறுவர்கள் தின விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றது. பள்ளி வளாகம் மூன்றில் இருந்து ஆரம்பமாகிப் பிரதான வீதி வழியாகச் சென்று மீண்டும் பள்ளி வளாகத்தை வந்தடைந்தது.



# துல்லியமாக அழிக்கப்பட்ட இஸ்ரேலின் எதிரிகள்...!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

(ஈரானில் ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே படுகொலை செய்யப்பட்ட இரு மாதங்களின் பின்னர், பெய்ரூட்டில் வான்வழித் தாக்குதலில் ஹிஸ்புல்லா தலைவர் ஷேக் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டுள்ளார்.

இனிவரும் நாள்கள் மத்திய கிழக்கில் மிக தீர்க்கமான நாள்களாக அமைய உள்ளன.

பாலஸ்தீன, ஹிஸ்புல்லா தலைமைகளைக் குறி வைத்துத் தாக்குதல் நடத்தும் இஸ்ரேல் படைகளும், உளவு அமைப்பு மொசாட்டும் மிகத்தீவிரமாக தற்போது வேட்டையாடத் தொடங்கியுள்ளன.)

சமீபத்திய ஆண்டுகளில் மத்திய கிழக்கில் பல ஹமாஸ், ஹிஸ்புல்லா உயர்மட்டத் தலைவர்களை இஸ்ரேல் படுகொலை செய்துள்ளது.

இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களை இதுவரையில் உத்தியோக பூர்வமாக உறுதிப்படுத்துவதில்லை.

**இஸ்ரேலின் இலக்கு ஹசன் நஸ்ரல்லா**

ஷேக் ஹசன் நஸ்ரல்லா மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ஹிஸ்புல்லாவுக்குத் தலைமை தாங்கி, மத்திய கிழக்கின் மிகவும் சக்தி வாய்ந்த போராளிக் குழுவை வழிநடத்திய தலைவராவார்.

இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்கள் பெய்ரூட்டின் தெற்கு புறநகர்ப் பகுதியான ஹரேக் ஹ்ரீக்கில் கடந்த வெள்ளிக்கிழமை ஆறு கட்டடங்களை முழுமையாக அழித்தன. இது இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையே கிட்டத்தட்ட ஒரு வருட மோதலின் போது லெபனான் தலைநகரில் நடந்த மிக முக்கியமான, கடுமையான தாக்குதலாகும்.

ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லாவை இலக்காக வைத்து இஸ்ரேலிய தாக்குதல்கள் தெற்கு பெய்ரூட் புறநகர் பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை பாரிய வான் தாக்குதல் நடத்தப்பட்டது.

இஸ்ரேலிய இராணுவம் பெய்ரூட்டில் உள்ள ஹிஸ்புல்லாவின் தலைமையகத்தை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் ஏராளமான பொது மக்கள் இறந்தனர். மற்றும் பலர் காயங்களுக்கு ஆளாகினர்.

**ஈரானில் ஹமாஸ் தலைவர் கொலை!**

ஜுலை மாத இறுதியில் ஈரானில் அதிபர் மசூத் பெசெஷ்கியானின் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்த வேளையில் ஹமாஸ் இயக்கத் தலைவர் இஸ்மாயில் ஹனியே, அவரது மெய்ப் பாதுகாவலருடன் தெஹ்ரான் இல்லத்தில் குறி வைக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.



பாலஸ்தீன, ஹிஸ்புல்லா உறுப்பினர்களைக் குறி வைத்துத் தாக்குதல் நடத்தும் இஸ்ரேல் படைகளும், உளவு அமைப்பு மொசாட்டும் மிகத்தீவிரமாக தற்போது வேட்டையாடத் தொடங்கி உள்ளன.

இஸ்ரேல் – ஹமாஸ் படைகளுக்கு இடையே பல மாதங்களாக போர் நீடித்து வருகிறது. இந்தப் போரில் உயிரிழந்த பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை ஐம்பதாயிரமாக உயர்ந்துள்ளது. தொடர்ந்து ஹமாஸ் அமைப்பினர் மீதான தாக்குதலை இஸ்ரேல் படைகள் தீவிரப்படுத்தி வருகின்றது.

இந்த போரின் நடுவிலும், குறிப்பாக பாலஸ்தீன–ஹிஸ்புல்லா உறுப்பினர்களைக் குறி வைத்து இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தி வருகிறது. ஜுலை இறுதியில் ஈரான் தலைநகர் டெஹ்ரானில் ஹமாஸ் இயக்கத் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டார்.

ஈரானின் புதிய ஜனாதிபதியாகத் தேர்வான மசூத் பெசெஷ்கியன் பதவியேற்பு விழாவில் பங்கேற்க சென்றிருந்த வேளையிலேயே இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டார். இதில் ஹனியே மற்றும் அவரது பாதுகாவலர் இருவர் படுகொலை செய்யப்பட்டனர்.

ஹிஸ்புல்லா தலைவர் பலி!

நீண்ட காலமாக இஸ்ரேலிய தாக்குதலில் குறிவைக் கப்பட்ட ஹிஸ்புல்லா தலைவர் இரு முக்கிய ஹிஸ்புல்லா தலைவர்களுடன் பெய்ரூட்டில் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி▼



# துல்லியமாக அழிக்கப்பட்ட இஸ்ரேலின் எதிரிகள்...!

**தொடர்ச்சி▲**

பெய்ரூட்டில் ஹிஸ்புல்லாவின் மத்திய தலைமையகத்துக்கு எதிராக இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் நடத்தின. இலக்கு தவறாத தாக்குதலை தொடர்ந்து ஹிஸ்புல்லாவின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டார்.

அத்துடன் தெற்கு லெபனானில் உள்ள ஹிஸ்புல்லாவின் ஏவுகணைப் பிரிவின் தளபதி முஹம்மது அலி இஸ்மாயில் மற்றும் அவரது துணைத் தலைவர் ஹுசைன் அஹ்மத் இஸ்மாயில் ஆகியோர் துல்லியமான தாக்குதலில் இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் தெரிவித்தன.

அலி இஸ்மாயில் பல தாக்குதல்களை இயக்கியதற்கும், இஸ்ரேலிய எல்லையை நோக்கி ராக்கெட்டுகளை வீசியதற்கும், மத்திய இஸ்ரேலை நோக்கித் தரையிலிருந்து மேற்பரப்புக்கு ஏவுகணையைச் செலுத்துவதற்கும் பொறுப்பானவர் என்று இஸ்ரேல் கூறியது.

ஹிஸ்புல்லாவின் ஏவுகணைகள் மற்றும் ராக்கெட் படையின் தலைவரான இப்ராஹிம் முஹம்மது கபிசி மற்றும் இந்தப் பிரிவின் மற்ற மூத்த தளபதிகள் முன்பு கொல்லப்பட்டதை அடுத்து, தற்போது முக்கிய இரண்டு தலைவர்களை ஒழித்ததாக இஸ்ரேலின் அறிவிப்பு வந்துள்ளது.

**லெபனான் அரசியலில் சக்தி வாய்ந்தவர்**

மத்திய கிழக்கில் மிகவும் பிரபலமான, மிகவும் செல்வாக்கு மிக்க நபர்களில் ஒருவரான ஷேக் ஹசன் நஸ்ரல்லாஹ் இஸ்ரேலால் படுகொலை செய்யப்படலாம் என்ற அச்சம் காரணமாக நஸ்ரல்லா பல ஆண்டுகளாக பொது வெளியில் அவர் காணப்படவில்லை.

ஹிஸ்புல்லாவை அரசியல் மற்றும் இராணுவ சக்தியாக மாற்றுவதில் அவர் முக்கிய பங்கு வகித்தார். மேலும் குழுவின் ஆதரவாளர்களால் மிகவும் மதிக்கப்பட்டவர். தற்போது இஸ்ரேலிய இராணுவம் பெய்ரூட்டில் நஸ்ரல்லாவைக் கொன்றதாகக் கூறியுள்ளது.

லெபனானின் போர்க் குணம் மிக்க ஷியா இஸ்லாமிய ஹிஸ்புல்லா இயக்கத்தின் தலைவரான ஷேக் ஹசன் நஸ்ரல்லா, ஈரானுடன் நெருக்கமான தனிப்பட்ட தொடர்புகளைக் கொண்ட ஒரு நிழலான நபர். நஸ்ரல்லாவின் தலைமையின் கீழ், ஹிஸ்புல்லா பாலஸ்தீனிய ஆயுதக் குழுவான ஹமாஸ் மற்றும் ஈராக் மற்றும் யேமனில் உள்ள போராளிகளுக்கு ஈரான் பயிற்சி அளித்தது.

லெபனானை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலிய துருப்புக்களை எதிர்த்துப் போராடுவதற்காக நிறுவப்பட்ட ஹிஸ்புல்லாவின் பரிணாமத்தை அவர் லெபனான் இராணுவத்தை விட வலிமையான இராணுவப் படையாக மாற்றினார். இஸ்ரேலுக்கு எதிராகப் பயன்படுத்த



ஈரானிடம் இருந்து ஏவுகணைகள் மற்றும் ஹிஸ்புல்லா ஆயுதங்கள் ரொக்கெட்டுகள் மற்றும் ஏவுகணைகளைப் பெற்று வந்துள்ளது. நீண்ட காலமாக நசரல்லா லெபனான் அரசியலில் ஒரு சக்தி வாய்ந்தவராக விளங்கினார்.

**மொசாட்டின் தப்பாத குறி**

சமீபத்திய ஆண்டுகளில் பல ஹமாஸ் , ஹிஸ்புல்லா உயர்மட்டத்தினர் இஸ்ரேலால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

2004 இல், இஸ்ரேல் காஸாவில் வான்வழித் தாக்குதலை நடத்தி, அப்போது ஹமாஸின் தலைவர் அப்தெல் அஜிஸ் ரந்திசி கொன்றது. அதே ஆண்டு, காசா நகரில் ஹமாஸ் போராளிக் குழுவின் நிறுவனர்களில் ஒருவரான அகமது யாசினையும் படுகொலை செய்தது.

ஈரானில் ஹனியே படுகொலை செய்யப்பட்ட இரு மாதங்களின் பின்னர், இஸ்ரேலிய படைகள் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் வான்வழித் தாக்குதலில் ஹிஸ்புல்லா தளபதி ஷேக் ஹசன் நஸ்ரல்லாவை கொன்றதாக தெரிவித்துள்ளது.

**மரணத்தை உறுதிப்படுத்திய ஹிஸ்புல்லா**

அண்மையில் ஹிஸ்புல்லா உறுப்பினர்கள் பயன்படுத்திய ஆயிரக் கணக்கான பேஜர்கள் மற்றும் வோக்கி டோக்கி கைபேசிகளை வெடிக்கச் செய்து இஸ்ரேல் 39 பேரைக் கொன்றதுடன், ஆயிரக் கணக்கானவர்களைக் காயப்படுத்தியது.

கடந்த ஒரு வாரத்தில் இஸ்ரேல் ஹிஸ்புல்லா மீது தாக்குதல்களை பாரியளவில் அதிகரித்தது. கிட்டத்தட்ட 800 போராளிகளைக் கொன்றது. வான் வெளி குண்டுவெடிப்புகளால் ஆயிரக் கணக்கான போராளிகள் காயமடைந்தனர்.

அதைத் தொடர்ந்து நசரல்லாவின் கீழ் இயங்கிய ஹிஸ்புல்லாவின் மூத்த தளபதிகள் தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் கொல்லப்பட்டனர்.

இறுதியாக நேற்று வெள்ளிக்கிழமை இரவு ஹசன் நசரல்லா கொல்லப்பட்டதாக இஸ்ரேல் அறிவித்தது. இந்த இறப்பை நீண்ட நேரம் உறுதிப்படுத்தாத ஹிஸ்புல்லா தற்போது அவரின் இறப்பை உறுதி செய்துள்ளது. இனிவரும் நாள்கள் மத்திய கிழக்கில் மிக தீர்க்கமான நாள்களாக அமைய உள்ளன.



### சிகிச்சைக்குப் பின் கண்விழித்தார்

# ரஜினி நன்றி!

## வைத்தியசாலையில் தொடர் கண்காணிப்பு

## நாளையதினம் வீடு திரும்ப வாய்ப்பு

உடல்நலக் குறைவால் சிகிச்சை பெறும் நடிகர் ரஜினிகாந்த், கண் விழித்த பின்னர் தமக்கு சிகிச்சையளித்த வைத்தியர்களுக்கு நன்றி தெரிவித்தார் எனவும் தொடர்ந்து பேசி வருகிறார் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நடிகர் ரஜினிகாந்திற்கு நேற்று மாலை திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டதையடுத்து அப்போலோ வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். செரிமானப் பிரச்சினை, சீரற்ற இரத்த ஓட்டம் மற்றும் வயிற்று வலி காரணமாகவே அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனவும், பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்புவார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது ரஜினிகாந்திற்கு இரத்த நாளத்தில் அடைப்பு கண்டறியப்பட்டதையடுத்து, ஆஞ்சியோபிளாஸ்டி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது எனவும் இரத்த நாளத்தில் ஏற்பட்ட அடைப்பு சரி செய்யப்பட்ட நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும், வைத்திய கண்காணிப்பிற்குப் பின்னர் இன்று மாலை சாதாரண வார்ட்டுக்கு மாற்றப்பட உள்ளார் எனவும் தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கிடையில் அவர் நாளை வீடு திரும்புவார் எனவும் கூறப்படுகிறது. வைத்தியர்கள் சாய் சதீஷ், விஜய் சந்திரன் மற்றும் பாலாஜி ஆகியோர் அடங்கிய குழுவினர் நடிகர் ரஜினிகாந்தின் உடல்நிலையைக் கண்காணித்து வருகின்றனர்.

உடல்நலக் குறைவால் சிகிச்சை பெறும் நடிகர் ரஜினிகாந்த், கண் விழித்த பின்னர் தனக்கு சிகிச்சையளித்த வைத்தியர்களுக்கு நன்றி தெரிவித்தார் எனவும் தொடர்ந்து பேசி வருகிறார் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ஹோட்டல் அறையில் உல்லாசம் பெண் பலி; காதலன் கைது!

குஜராத் மாநிலத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தனது காதலனுடன் உல்லாசமாக இருந்த இளம்பெண் உயிரிழந்துள்ளார். உடலுறவின் போது அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டதன் காரணமாக அந்தப் பெண் இறந்துள்ளார் என தடயவியல் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் நவ்சாரி நகரில் கடந்த 23ஆம் திகதி நடந்துள்ளது. இது தொடர்பாக பொலிஸார் நடத்திய தீவிர விசாரணைக்குப் பிறகு அந்த பெண்ணின் காதலனை கைது செய்துள்ளனர்.

இதுகுறித்து பொலிஸ் தரப்பில் கூறியவை வருமாறு –

நவ்சாரி ஹோட்டலில் அறை எடுத்து காதலனுடன் உல்லாசமாக இருந்தபோது, பெண்ணுக்கு அதிக அளவில் இரத்தம் வெளியேறியிருக்கிறது. ஆனால், அவரது காதலனோ, உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்க முயற்சி செய்யாமல், ஒன்லைனில் வழிமுறைகளைத் தேடி நேரம் கடத்தியிருக்கிறார்.

ஒரு கட்டத்தில் இரத்தப்போக்கு அதிமாகி அந்தப் பெண் மயங்கியிருக்கிறார். இதனால் பயந்துபோன காதலன், தனது நண்பர் ஒருவரை ஹோட்டலுக்கு வரவழைத்து அவர் உதவியுடன் அந்தப் பெண்ணை தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளார். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்து, அரசு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். ஆனால் அங்கு அந்தப் பெண்ணைப் பரிசோதித்த வைத்தியர்கள், அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் எனத் தெரிவித்தனர்.

இதனால் அவரது உடல் தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தடயவியல் பரிசோதனையில், உடலுறவுக்குப் பிறகு அதிக இரத்தம் வெளியேறியதால் அவர் இறந்திருப்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து காதலன் கைது செய்யப்பட்டார்.

– இவ்வாறு பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட காதலனை ஒக்டோபர் 4ஆம் திகதி வரை காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.



# லெபனான் மீது இஸ்ரேல் வான் தாக்குதல்

## 24 மணி நேரத்தில் 95 பேர் பலி! 172 பேர் காயம்

24 மணி நேரத்தில் லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 95 பேர் உயிரிழந்துள்ளனர். 172 பேர் காயமடைந்துள்ளனர்

லெபனான் தலைநகர் பெருட்டில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் தலைமையிடத்தை குறிவைத்து இஸ்ரேல் கடந்த வெள்ளிக்கிழமை குண்டுமழை பொழிந்தது. இந்த அதிரடித் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் நஸ்ரல்லா கொல்லப்பட்டார்.

அதேபோல், லெபனானின் தெற்குப் பகுதி, தலைநகர் பெருட் உள்பட பல்வேறு இடங்களில் இஸ்ரேல் தொடர்ந்து வான்வழித் தாக்குதல் நடத்தி வருகின்றது. இந்தத் தாக்குதலில் ஹிஸ்புல்லா பயங்கரவாதிகள் உள்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், லெபனானின் வெவ்வேறு பகுதிகளில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில், 24 மணி நேரத்தில் மொத்தம் 95 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 172 பேர் காயமடைந்துள்ளனர் என்று லெபனான் சுகாதார அமைச்சகம் நேற்று இரவு தெரிவித்துள்ளது.

பால்பெக்-ஹெர்மல் மாவட்டத்தில் 16 பேர் கொல்லப்பட்டனர் எனவும், 48 பேர் காயமடைந்தனர் எனவும், மேலும் 16 பேர் கொல்லப்பட்டனர் எனவும், 55 பேர் காயமடைந்தனர் எனவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கூடுதலாக, பெய்ரூட்டில் நான்கு இறப்புகள் மற்றும் நான்கு காயங்கள் பதிவாகியுள்ளன, தெற்கு கவர்னரேட்டில் 52 பேர் கொல்லப்பட்டனர் எனவும் 43 காயமடைந்தனர் எனவும், பெக்கா பகுதியில் ஏழு பேர் கொல்லப்பட்டனர் எனவும் 22 பேர் காயமடைந்தனர் எனவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.



கனடா முரசு
பக்கங்கள் 07
செவ்வாய்க்கிழமை 01/10/2024

## கத்தி குத்தில் பெண் சாவு!

கனடாவின் ஸ்காப்ரோ மெர்க்லி பகுதியில் இடம்பெற்ற கத்திக்குத்துத் தாக்குதலில் பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக 02

# தமிழர் சமூகத்தின் பலம் ஒற்றுமையே கனேடியத் தமிழர் பேரவை தெரிவிப்பு

**ஒன்றாரியோ, ஒக்டோபர் 01**

**தமிழ் சமூகத்தின் குறிப்பிடத்தக்க பலம் ஒற்றுமை என கனேடியத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.**

**இது தொடர்பில் கனேடியத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:**

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

"கனேடிய தமிழர் பேரவையின் (CTC) கடந்த மாதங்களை பிரதிபலிக்கும் போது, எமது சமூகத்தின் குறிப்பிடத் தக்க பலம், ஒற்றுமை என்பன எமக்கு நினைவுக்கு வருகின்றது. எதிர்ப்புகள், வன்முறை, துஷ்பிரயோகம், துன்புறுத் தல் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட தவறான தகவல் பிரச்சாரங்களை எதிர்கொண்ட போதிலும், ஆயிரக் கணக்கான பங்கேற்பாளர்களை ஒன்றி ணைத்து 2024ஆம் ஆண்டு தமிழர் தெருவிழாவை வெற்றிகரமாக நடத்தி யிருந்தோம். சவால்களுக்கு மத்தியில் நடைபெற்ற இந்த தமிழ் கலாச்சார கொண்டாட்டம், கனடாவிலும் உல கெங்கிலும் உள்ள தமிழர்களை உயர்த் துவதற்கும் பிரதிநிதித்துவப்படுத்துவ தற்கும் எங்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி வருகி றது. CTC எப்பொழுதும் எங்கள் சமூகத் திற்கு ஆதரவின் தூணாக இருந்து வருகிறது. கனடிய மண்ணில் வாழும் தமிழர்களின் கண்ணியம், கடின உழைப்பு மற்றும் உயர்ந்த வாழ்க்கைத் தரங்களின் நற்பெயரைப் பாதுகாக்க நாங்கள் உழைத்துவருவதோடு அவற்றைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்திவருகின்றோம்.

இந்த அறிக்கையானது கடந்த சில மாதங்களின் முக்கிய சாதனைகள், நாங்கள் எதிர்கொண்ட சவால்கள், வளர்ச்சி, ஒத்துழைப்பு மற்றும் எங்கள் எதிர்கால திட்டங்களை கோடிட்டுக் காட்டுகிறது. இந்த முக்கியமான தரு ணத்தில், வரவிருக்கும் தலைமுறைக ளுக்கு பிரகாசமான, மேலும் உள்ளடக் கிய எதிர்காலத்தை உருவாக்க எங்க ளுடன் ஒன்றிணையுமாறு அனைத்து உறுப்பினர்களையும் ஆதரவாளர்க ளையும் நாங்கள் கேட்டுக்கொள்கி றோம். C2



# அரசியல் துருவமுனைப்பை எதிர்க்க கனடா அழைப்பு!

## நியூயோர்க்கில் ஐ.நா. மாநாட்டில் அமைச்சர் மெலானி ஜோலி உரை

ஒன்றாரியோ, ஒக்டோபர் 01

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப் பினர்களை வெளிநாட்டில் வளர்ந்து வரும் அரசியல் துருவமுனைப்பை எதிர்க்குமாறு வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜோலி கோரியுள் ளார்.

நியூயோர்க்கில் தலைவர்கள் மற் றும் அமைச்சர்களின் வருடாந்த கூட் டத்தில் ட்ரூடோ அரசாங்கத்தின் கடைசி உரை என்னவாக இருக்க முடியும் என்பதில் ஜோலி ஐ.நா பொதுச் சபையில் தனது உரையின் மையத்தில் பெண்களின் உரிமைகள் மற்றும் சர்வதேச சட்டங்களை முன் வைத்தார்.

'சுதந்திரத்திற்காக பேசுவதாகக் கூறும் சில உரத்த குரல்கள் தங்கள் சொந்த நோக்கங்களுக்காக அந்த வார்த்தையை மறுவரையறை செய்ய முயற்சிக்கின்றன' என்று அவர் நேற்று இந்த உரையின் போது தெரிவித்தார்.

மக்களின் LGBTQ+ உரிமைகள், இனப்பெருக்கத் தேர்வுகள் 'அல்லது அவர்கள் என்ன அணியலாம்' என்ப தைத் தடுக்க விரும்பும் தலைவர்களை ஜோலி அழைத்தார். 02




## கத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ரொறன்ரோ பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் தகவல் அறிந்த பொலிஸார் அந்த இடத்திற்கு விரைந்துள்ளனர்.

அதன்போது படுகாயம் அடைந்த நிலையில் இருந்த பெண் அந்த இடத்திலேயே உயிரிழந்து விட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த பெண் மற்றும் சந்தேக நபர் தொடர்பான விவரங்களை எதுவும் பொலிஸார் வெளியிடவில்லை.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பினும் அவர் கியூபெக் அல்லது பிரான்சில் மதச் சின்னங்கள் மீதான கட்டுப்பாடுகளைக் குறிப்பிடவில்லை.

'நாங்கள் அதை எங்கள் நாட்டில் பார்க்கிறோம்; நாங்கள் அதை உலகம் முழுவதும் பார்க்கிறோம்,' என்று அவர் கூறினார், தொடர்ச்சியான மோதல்களை ஆராய்வதற்கு முன், இறையாண்மை மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விதிகளை நிலைநிறுத்தும் நாடுகளால் மட்டுமே தீர்க்க முடியும் என்று அவர் கூறினார்.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### தமிழர் தெருவிழா 2024

இந்த ஆண்டு தமிழர் தெருவிழா சமூக பலத்தின் சக்திவாய்ந்த காட்சியாக அமைந்திருந்தது. ஒழுங்கமைக்கப்பட்ட எதிர்ப்புகள், சீர்குலைக்கும் நடத்தைகள், தமிழர் தெருவிழாவின் அனுசரணையாளர்கள், கலைஞர்கள் மற்றும் தன்னார்வலர்களை அச்சுறுத்தும் மூன்றாம் தரப்பினரின் முயற்சிகள் இருந்தபோதிலும், இரண்டு நாள்களில் பல்லாயிரக்கணக்கான பங்கேற்பாளர்களை இந்த நிகழ்வு ஒன்றிணைத்தது. பெண்கள், முதியவர்கள், கலைஞர்கள், மற்றும் குழந்தைகள் மீதான தனி நபர் தாக்குதல்கள் உட்பட, துன்புறுத்தல் மற்றும் வாய்மொழி துஷ்பிரயோகங்களுக்கு மத்தியிலும் பல குடும்பங்கள் கலந்துகொண்டன. CTC சந்தேகத்திற்கு இடமின்றி இத்தகைய வன்முறை செயல்களை கண்டிக்கிறது என்பதோடு மாறுபட்ட கருத்துக்கள் ஒரு உரிமை என்றாலும், அவை மரியாதையுடன் சரியான முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற எங்கள் நம்பிக்கையில் உறுதியாக நிற்கிறது. நமது சமூகத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் எந்த முயற்சியும் பொறுத்துக் கொள்ளப்படாது.

சட்ட ஆலோசனை மற்றும் சட்ட அமலாக்க துறையினரின் ஆதரவைப் பெறுவது உட்பட, இந்த சம்பவங்களைத் தீர்க்க CTC தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எப்பொழுதும் போல், தமிழர் தெருவிழா ஓர் இலாப நோக்கற்ற முயற்சியாகவே அமைந்து வருகிறது. மேலும் இந்த நிகழ்வு தொடர்பான அனைத்து நிதிகளும் சுயாதீனமாக தணிக்கை செய்யப்படுகின்றன. இந்த கணக்கு பதிவுகள் உறுப்பினர்களுக்கு கிடைக்கப்பெறுவதை நாங்கள் உறுதிசெய்வோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

### தலைமைத்துவத்திலிருந்து தவறான தகவல் மற்றும் மௌனத்தை எதிர்த்தல்

புறக்கணிப்பு அமைப்பாளர்களால் தொடங்கப்பட்ட தவறான தகவல் பிரச்சாரத்தை CTC நன்கு அறிந்திருக்கிறது, மேலும் தவறான கதைகளுக்கு எதிராக விழிப்புடன் இருக்குமாறு எங்கள் சமூகத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம். கனடிய தமிழர் பேரவை பின்வருவனவற்றை மீண்டும் மிக தெளிவாக உறுதிப்படுத்துகின்றது;

1. CTC இலங்கை அரசாங்கத்துடன் எந்தவொரு முன்மொழிவுகளிலும் அல்லது பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடவில்லை.

2. UNHCR தீர்மானங்கள் மற்றும் தடைகள் போன்ற முன்முயற்சிகள் மூலம் உறுதியான தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் மனித உரிமைகளுக்காக நாங்கள் தொடர்ந்து வாதிடுகிறோம்.

3. பொருளாதார வலுவூட்டல் திட்டங்கள் மற்றும் மனிதாபிமான முயற்சிகள் மூலம் இலங்கையில் உறுதியான விளைவுகளை ஏற்படுத்துவதில் CTC ஈடுபட்டுள்ளதில் பெருமிதம் கொள்கிறது.

4. CTC நீண்டகாலமாக தமிழ் இனப் படுகொலை நடக்கின்றது என்பதை அங்கீகரித்து வருகிறது என்பதோடு பிராம்ப்டனில் தமிழ் இனப்படுகொலை நினைவகம் தொடர்புடைய முயற்சிகளை ஆதரித்துள்ளது. கறுப்பு ஜூலை 1983 மற்றும் யாழ் நூலகம் எரிப்பு போன்ற தமிழர்களின் இன அழிப்பிற்கான ஆரம்ப நிகழ்வுகளையும் இணையத்தளத்தில் பதிவு செய்துள்ளோம்.

இந்த நெருக்கடியான நேரத்தில் தமிழர் தெருவிழாவில் இடம்பெற்ற குற்ற சம்பவங்களிற்கு தமிழ் மற்றும் தமிழரல்லாத நமது பிரதிநிதிகள் பகிரங்கமாக கண்டனம் தெரிவிக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடமிருந்து வரும் மௌனம் ஏமாற்றத்தை அளிக்கிறது. தமிழ்த் தெருவிழாவின் போது இடம்பெற்ற துன்புறுத்தல்கள், அச்சுறுத்தல்கள், மற்றும் வன்முறைகளை சந்தேகத்திற்கு இடமின்றி கண்டிக்குமாறு மக்கள் பிரதிநிதிகள் உட்பட அனைத்து சமூக உறுப்பினர்களுக்கும் CTC அழைப்பு விடுக்கிறது. இந்தச் செயல்களிற்கு அமைதியாக இருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது மட்டுமல்ல, அத்தகைய நடத்தை சகிக்கத்தக்கது என்ற ஆபத்தான செய்தியை அனைவரது மௌனமும் உருவாக்கும் நிலை ஏற்படும்.

இந்தத் தீங்கு விளைவிக்கும் செயல்களுக்கு எதிராக குரல் கொடுக்குமாறு தலைவர்களையும் அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு செய்யத் தவறுவது ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தையை சட்டப்பூர்வமாக்குகிறது என்பதோடு எதிர்காலத்திற்கு தீங்கு விளைவிக்கும் முன்னுதாரணத்தை ஏற்படுத்துவதாகவும் அமையும். நாம் ஒன்றுபட்டு, இந்தச் செயல்களைக் கண்டித்து, இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். மௌனம் என்பது ஒரு தேர்வாக இந்த தருணத்தில் இருக்க முடியாது.

### இணைந்து செயற்படுதலும் சமூகத்தின் ஆலோசனையை பெற்றுக்கொள்ளலும்


CTC பல ஆண்டுகளாக நல்ல நம்பிக்கையுடன் பல்வேறு நிறுவனங்களுடன் ஈடுபட்டு வருகின்றது என்பதோடு அனைத்து விருப்பமுள்ள கூட்டாளர்களுடனும் தொடர்ந்து இணைந்து செயற்படவும் ஆவலாக உள்ளது . சமூகத்தின் கூட்டு நலனுக்காக ஒன்றிணைந்து செயல்படவும் அனைத்து சமூக செயற்பாட்டாளர்களுடன் ஒற்றுமையை வளர்க்கவும் CTC உறுதியாக உள்ளது.

முன்னோக்கிப் பார்க்கையில், கனடாவில் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து உள்ளீடுகளைச் சேகரிக்க சமூக ஆலோசனை முயற்சியை நாங்கள் தொடங்கியுள்ளோம். இம்முயற்சியானது ஆளுகை, சமூகப் பிரதிநிதித்துவம், சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு மற்றும் தமிழ் மொழி, கலைகள் மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும். டிசம்பர் வரை இயங்கும் இந்த முயற்சியானது சமூக உறுப்பினர்கள், கல்வியாளர்கள் மற்றும் நிபுணர்களின் உள்ளீட்டின் மூலம் CTCக்கான ஐந்தாண்டு மூலோபாயத் திட்டத்தை வடிவமைக்கும்.

### அடுத்து என்ன?

CTC யின் பணி எப்போதும் போல் உறுதியாக உள்ளது. எங்களின் பயணம் உறுதிப்பாடு, நீதி மற்றும் சமத்துவத்திற்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் உள்ளது. எதிரெதிர் கண்ணோட்டங்களைச் சந்தித்தாலும், எங்கள் சமூகத்தின் சிறந்த கருத்துக்களை கேட்போம், அவர்களோடு தொடர்ந்து ஈடுபடுவோம், அவர்களுக்காக தொடர்ந்து செயல்படுவோம். மரியாதைக்குரிய உரையாடல் கருத்துப் பகிர்வுகளை நாங்கள் என்றும் வரவேற்கின்றோம். ஆனால் எங்கள் முக்கிய மதிப்புகள் மற்றும் பணிகளில் நாங்கள் ஒருபோதும் சமரசம் செய்ய மாட்டோம்.

இந்தப் பயணத்தில் எங்களுடன் இணைந்துகொள்ள அனைவரையும் அழைக்கின்றோம். ஒற்றுமையே எமது பலம்." - என்று உள்ளது.




# சட்டப் பீட தவணை வகுப்புகள் மெக்கில் பல்கலையில் ரத்தாகும்?

## சட்டப் பேராசிரியர்கள் சங்கப் போர்க் கொடியால்

கியூபெக், ஒக்டோபர் 01

ஓகஸ்ட் மாதம் முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரிய தொழிற்சங்கத்துடன் உடன்பாட்டை எட்ட முடியாவிட்டால், மீதமுள்ள சட்டப் பீட தவணைப் வகுப்புகளை இரத்து செய்வதாக மெக்கில் பல் கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

மெக்கில் சட்டப் பேராசிரியர்கள் சங்கம் பல்கலைககழகத்தில் உள்ள மற்ற தொழிற்சங்கங்களுடன் கூட் டாக வேலை நிலைமைகளை பேச்சு வார்த்தை நடத்த ஒப்புக்கொண்டால் - தொழிற்சங்கத்தின் முக்கிய கோரிக் கைகளில் ஒன்றான - தொழிற்சங்க உரிமைக்கான ஆசிரியர்களின் உரிமைக்கான சட்ட சவாலை கைவிடு வதாக பல்கலைக்கழகம் கூறுகிறது.

இருப்பினும், பேராசிரியர்கள் சங் கம் முன்மொழியப்பட்ட ஒப்பந் தத்தை அர்த்தமற்றது என்று அழைக்கிறது.



# கியூபெக் மொழிச் சீர்திருத்தத்துக்கு எதிராக உயர்நீதிமன்றில் முறையீடு!

கியூபெக், ஒக்டோபர் 01

கியூபெக் உயர் நீதிமன்ற நீதிபதியிடம், மாகாணத்தின் 2022 மொழிச் சீர்திருத்தத்தின் பல பகுதிகளை இடைநிறுத்துமாறு இருமொழி நகராட்சிகளின் 23 குழுக்கள் திங்களன்று கேட்டுக் கொண்டன.

சட்டத்தின் பயன்பாடு தங்களுக்கு கடுமையான மற்றும் சீர்படுத்த முடியாத தீங்கு விளைவிக்கும் என்று அவை சுட்டிக்காட்டியுள்ளன.

ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு ஆகிய இரு மொழிகளிலும் குடிமக்களுக்குச் சேவை செய்யும் உரிமையைக் கொண்ட நகரங்களுக்கு 'மிகப்பெரிய விளைவுகளை' ஏற்படுத்தும் நடவடிக்கைகள் சட்டத்தில் உள்ளன என்று தெரிவித்துள்ளன.

அதிகாரப்பூர்வ இருமொழி அந்தஸ்து இல்லாத நகராட்சிகள் குடியிருப்பாளர்களுடன் ஆங்கிலத்தில் தொடர்புகொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்த வாதங்கள் அச்சத்தை அடிப்படையாகக் கொண்டவை என்றும் 'சட்ட அடிப்படை அல்லது உண்மை அடிப்படை இல்லை' என்றும் ஒரு அரச தரப்பு சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.



# உண்மை, நல்லிணக்கத்திற்கான தேசிய தின விழா ஒட்டாவாவில்!

ஒன்றாரியோ, ஒக்டோபர் 01

ஒட்டாவா - குடியிருப்புப் பாடசாலைகளின் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் மற்றும் உயிர் பிழைத்தவர்களை - மற்றும் இல்லாத - ஆயிரக்கணக்கானோரை நினைவுகூரும் நிகழ்வு நேற்று ஒட்டாவாவில் இடம்பெற்றது.

ஆனால், நாடாளுமன்ற வளாகத்தில் நடந்த உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய தின விழாவில் மிகவும் கடினமான தருணங்களுக்கு மத்தியில் இடம்பெற்றது.

கவர்னர் ஜெனரல் மேரி சைமன், முன்னி அமைச்சர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# குடியிருப்புப் பாடசாலைகளில் இறந்து போன குழந்தைகளின் கல்லறைகளைத் தேடும் பணி

## உண்மையை மத்திய அரசு இருட்டில் வைத்திருப்பதாகக் குற்றச்சாட்டு

ஒன்றாரியோ, ஒக்டோபர் 01

குடியிருப்புப் பாடசாலைகளில் இறந்த குழந்தைகளின் கல்லறைகளைத் தேடும் பதிவுகள் மற்றும் தரைத் தேடல்களுக்கான நிதியைக் குறைப்பதன் மூலம் அந்த பாடசாலைகளைப் பற்றிய உண்மையை மத்திய அரசு இருட்டில் வைத்திருப்பதாக குடியிருப்புப் பாடசாலைகளில் இருந்து உயிர் பிழைத்தவர்கள் கூறுகின்றனர்.

150,000 க்கும் மேற்பட்ட குழந்தைகள் குடியிருப்புப் பாடசாலைகளில்; சேர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது,

மேலும் பல உயிர் பிழைத்தவர்கள் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் தாங்கள் அனுபவித்த கொடூரமான துஷ்பிரயோகத்தை விவரித்தனர்.

பாடசாலைகளில் படிக்கும் போது 6,000 குழந்தைகள் இறந்தனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் உண்மையான எண்ணிக்கை இதை விட அதிகமாக இருக்கலாம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

2021 ஆம் ஆண்டில், பல முதல் நாடுகள் முன்னாள் குடியிருப்புப் பாடசாலைகளின் தளங்களில் மனித எச்சங்கள் இருப்பதாகத் தோன்றியதைக் கண்டறிவதாக அறிவித்த பிறகு, ஒட்டாவா 116 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான மதிப்பிலான - கல்லறைகளைத் தேடுவதற்கும் இறந்த குழந்தைகளை நினைவுகூருவதற்கும் - ஒதுக்க முன்வந்தது.




மார்ச் 2024 நிலைவரப்படி, அரசாங்கம் உண்மையில் 146 வெவ்வேறு நிதி ஒப்பந்தங்கள் மூலம் 216 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

அது ஒரு வருடத்திற்கு சராசரியாக 71 மில்லியன் டொலர்களாக முடிந்தது.

அண்மைய வரவு - செலவுத் திட்டத்தில், அரசாங்கம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் 91 மில்லியன் டொலர்களை அல்லது ஆண்டுக்கு 45.5 மில்லியன் டொலர்களைக் கல்லறைகளைத் தேடும் பணியைத் தொடர ஒதுக்கியுள்ளது.



# உண்மை, நல்லிணக்கத்திற்கான தேசிய தினம் கனேடிய தமிழ் காங்கிரஸ் நினைவு கூர்ந்தது

ஒன்றாரியோ, ஒக்டோபர் 01 கனேடிய தமிழ் காங்கிரஸ் உண்மை மற்றும் நல்லிணக்கத் திற்கான தேசிய தினத்தை 2024 நினைவு கூர்ந்தது.

செப்டெம்பர் 29, 2024 அன்று, ஒன்ரா றியோவின் ஜோர்ஜினாவில் உள்ள சுட்டன் மாவட்ட உயர்நிலைப் பள்ளி யில் ஜோர்ஜினா தீவின் சிப்பேவாஸ் நடத்திய பவ் வாவ் நிகழ்ச்சியில் பங்கேற்றதன் மூலம் கனேடிய தமிழ் காங்கிரஸ் உண்மை மற்றும் நல்லி ணக்கத்திற்கான தேசிய தினத்தை அனுசரித்தது.

பாவ் வாவ், 'நாவென்ட்வின்' (உறவி னர்கள்) என்ற கருப்பொருளில், பாரம் பரிய நடனம், டிரம்மிங் மற்றும் கதை சொல்லல் ஆகியவை இடம்பெற்றன, இது தமிழ் காங்கிரஸுக்கு உள்நாட்டு கலாச்சாரத்துடன் ஈடுபடுவதற்கும் நல்லிணக்கத்தை நோக்கிய பய ணத்தை பிரதிபலிக்கும் அர்த்தமுள்ள வாய்ப்பை வழங்குகிறது.

இந்த நாளில் தமிழ் காங்கிரஸின் வருடாந்த பங்கேற்பு, பழங்குடியின சமூகங்களை ஆதரிப்பதில் அதன் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்.

சிப்பிவாஸ் பவ் வாவ் போன்ற நிகழ்வுகளில் கலந்துகொள்வதன் மூலம், தமிழ் காங்கிரஸ் பழங்குடி மக்களுடன் ஒற்றுமையாக நிற்கிறது மற்றும் கலாச்சார பரிமாற்றத்தின் மூலம் புரிந்துணர்வை வளர்க்கிறது.

சிறுவர்கள் உட்பட 50க்கும் மேற் பட்ட தமிழ் கனடியர்கள் பாவ் வாவ் வில் கலந்து கொண்டனர்.

இந்த ஈடுபாட்டின் மூலம், தமிழ் மற்றும் பழங்குடி சமூகங்களுக்கு இடையே பாலங்களை அமைப்பதில் CTC தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது, மேலும் சமமான எதிர்காலத்திற்கான ஒற்றுமை, மரியாதை மற்றும் கூட்டு நடவடிக்கை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

# சந்தேகநபரைக் கைது செய்ய முயன்ற பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயம்!

கனடாவில் ஸ்காப்ரோ பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் பொலிஸ் உத்தியோகத்தருக்கும் சந்தேகநபர் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில் பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயம் அடைந்துள்ளார்.

கையில் கத்தியுடன் இருந்த சந்தேக நபரை கைது செய்ய முயற்சித்த போது இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த மோதல் சம்பவம் காரணமாக பொலிஸ் உத்தி யோகத்தர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளார்.

எனினும் அந்த நபரை பொலிஸார் பின்னர் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

39 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார். சந்தேக நபர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.




# கல்கரியில் இருவர் சடலங்களாக மீட்பு

கனடாவின் ஆல்பர்ட் மாகாணத்தின் கல்கரியில் மெடேவ்ஸ் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் இரண்டு பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கல்கரி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த மரணங்கள் சந்தேகத்திற்கிடமானவை எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விசாரணைகள் ஆரம்பகட்டத்தில் காணப்படுவதாகவும் இதனால் மேலதிக விவரங்களை வெளியிட முடியாது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# வாகனக் கொள்ளைகளை தடுக்க விசேட நடவடிக்கை

கனடாவில் வாகனக் கொள்ளைச் சம்பவங்களைத் தடுப்பதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக ரொறன்ரோ பெரும் பாகப்பகுதியில் இடம்பெறக்கூடிய வாகன கொள்ளை சம்பவங்களை தடுத்து நிறுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யோர்க் பிராந்திய பொலிஸ இது தொடர்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

வாகனங்கள் களவாடப்பட்டு மறைத்து வைக்கப்படும் இடங்கள் தொடர்பில் புலனாய்வு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அநேகமான வாகனங்கள் களவாடப்பட்டு பின்னர் அவை இரகசியமான முறையில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள் களவாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெறுப்புணர்வுச் சம்பவங்களை தடுக்க விசேட நடவடிக்கைகள்



கனடாவில் வெறுப்புணர்வு மற்றும் குரோத செயல்களை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

லிபரல் அரசாங்கம் இது தொடர்பில் அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

குரோத உணர்வை தூண்டும் வகையிலான செயற்பாடுகள் மற்றும் வெறுப்புணர்வு சம்பவங்களை தடுத்து நிறுத்தும் வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய பல்வகைமை அமைச்சர் கமால் கெஹரா இது தொடர்பான செயல்திட்டத்தை முன்மொழிந்துள்ளார்.

பல்வேறு அரச நிறுவனங்களுடன் இணைந்து வெறுப்புணர்வு சம்பங்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக கனடிய அரசாங்கம் 274 மில்லியன் டொலர்களை ஒதுக்கீடு செய்துள்ளது. எதிர்வரும் ஆறு ஆண்டுகளுக்கு இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெறுப்புணர்வு தாக்குதல்கள் இடம்பெறக்கூடிய மத வழிபாட்டுத் தளங்கள், நிறுவனங்கள் போன்றவற் றிற்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சிசிடிவி கமரா கட்டமைப்புகள் உள்ளிட்டனவை ஏற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் குற்ற செயல்களை வரையறுக்கவும் கட்டுப்படுத்தவும் முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




# கனடிய மக்களின் ஆலோசனையை கோரும் வருமான முகவர் நிறுவனம்

கனடாவின் வருமான முகவர் நிறுவனம் நாட்டு வரி செலுத்துவோரிடம் ஆலோசனை கோரியுள்ளது.

எவ்வாறு தமது சேவையை மேம்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்து ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான பொது மக்களின் ஆலோசனை கோரும் நடவடிக்கை அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட நபர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் தங்களது பின்னூட்டங்களை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி வரையில் கனடியர்கள் வருமான முகவர் நிறுவனம் தொடர்பிலான கருத்துக்களை வெளியிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சேவைகள் தொடர்பிலும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் தங்களது கருத்துக்களை வெளியிடுமாறு கோரப்பட்டுள்ளது. இவ்வாறு ஏற்கனவே ஆலோசனைகள் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கனடாவில் இருவர் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்திய நபரும் சிக்கினார்

கனடாவின் வடக்கு இட்டாபீகாக் பகுதியில் இரண்டு நபர்கள் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்திய ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மவுன்ட் ஒலிவ் மற்றும் கிப்லிங் வீதிகளுக்கு அருகாமையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் காயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தில் காயமடைந்தவர்களின் நிலை தொடர்பான தகவல்கள் எதுவும் பொலிஸார் வெளியிடவில்லை.

இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைதான நபரும் காயமடைந்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கத்தி குத்து தாக்குதல் சம்பவத்திற்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் பொலிஸாரினால் வெளியிடப்படவில்லை.